# தமிழ்நாடு எங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவுநாள் அஞ்சலி!



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளைமுன்னிட்டு மதுரை வண்டியூர் ரிங் ரோடு மஸ்தான்பட்டியில் அமைந்துள்ள அன்னாரது முழு உருவ வெண்கல சிலைக்கு வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தமிழரசன், கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், சோமசுந்தர பாண்டியன், தனச் செல்வம், வடிவேல் முருகன், புதூர் சேகர், நேருபாண்டியன், கணேசன், கலை கார்த்திகேயன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.






மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் கோ.தளபதி தலைமையில் முன்னாள் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மாநில வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, ஆர்.கோபாலகிருஷ்ணன், மா.ஜெயராம் ஆகியோர் முன்னிலையில் மதுரை தமிழ் சங்கம் சாலையிலிருந்து அமைதி பேரணியாக சென்று சிம்மக்கல்லில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் மா.ஒச்சுபாலு, அக்ரி கணேசன், மூவேந்திரன், சௌந்தர்ராஜன், மேலமாசி வீதி சரவணன், முகேஷ் சர்மா, சரவணன் அம்பலம், புண்ணியமூர்த்தி, ஏ.கே.ஆறுமுகம், வைகை பரமன், முத்து கணேசன், பி.டி.மணிமாறன், ரவீந்திரன், காவேரி சொக்கலிங்கம், வி.சி.மாதவன், திராவிடமாரி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.





தேனி வடக்கு மாவட்ட சார்பாக தேவதானப்பட்டியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வடக்கு மாவட்ட செயலாளர் தங்கத்தமிழ்செல்வன் தலைமையில் ஊர்வலமாக வந்து கலைஞர் அவர்கள் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். உடன் மாநில உயர்நிலைசெயல்திட்ட குழு உறுப்பினர் எல். மூக்கையா, மாவட்ட துணை செயலாளர் பி.டி. செல்லபாண்டியன், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், தேவதானப்பட்டி பேரூர் செயலாளர் திலகர், கெங்குவார்பட்டி பேரூர் செயலாளர் தமிழன், முன்னாள் சேர்மன் ஸ்டாலின் குணா, வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன், சிறுபான்மை அணி மாவட்ட அமைப்பாளர் சேக் அப்துல்லா மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அம்பாசமுத்திரத் தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கே.கே.சி.பிரபாகரன்,கணேசன், செல்வ சூடாமணி உள்பட கழகத்தினர் திரளாகக் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ. மகேஷ் தலைமையில் அமைதிப் பேரணி தொடங்கி ஒழுகினசேரி, மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பேரணியில் என். தில்லை செல்வம், என். சுரேஷ்ராஜன், ஐ.கேட்சன், ஏ.ஆர். பூதலிங்கம் பிள்ளை, கரோலின் ஆலிவர்தாஸ் உட்பட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சர்,கழக மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன் கான் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.நிகழ்வில் கழக நிர்வாகிகள் மாலை ராஜா,ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,மேயர்.ராமகிருஷ்ணன், மேற்கு மாநகர பொறுப்பாளர் சுப்பிரமணியன்,சித்திக்,ராஜாவர்மன், அருண்குமார்,பூக்கடை அண்ணாதுரை, நமச்சிவாயம்,வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன்,முகம்மது மீரான்,அலிஃப் மீரான் உள்பட கழக நிர்வாகிகள்,மாமன்ற உறுப்பினர்கள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் சார்பில் சுரண்டை நகர தி.மு.க.ஏற்பாட்டில் முதமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புதிய பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.நிகழ்வில் நகர செயலாளர் ஏ.ஜி. கணேசன்,வார்டு நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகரில் நகர திமுக சார்பில் அம்மன் கோவில் திடலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நினைவு நாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு முன்னாள் எம்.எல்.ஏ ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர். மாதவன், இளைஞர் அணி கிருஷ்ணகுமார், பொதுக் குழு உறுப்பினர் ஆர்.பி. மதியழகன், சுதாகர், பழனிச்சாமி, மின்கழக அண்ணாதுரை, நேஷ்னல் ராமர், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி திருமாறன், நகர துணை செயலாளர் அ . மரியராசு, மகளிர் அணி வகிதா ரகுமான் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.